நகராட்சி அலுவலகம்,
பெரியகுளம்.

நாள். 10.06.2020.

## மன்றக் கூட்ட அறிவிப்பு

2020ம் ஆண்டு ஜுன் மாதம் 10ம் நாள்.10.06.2020 சார்வரி வருடம் வைகாசி 28ம் நாள் புதன்கிழமை பிற்பகல் 5.00 மணியளவில் கீழ்கண்ட பொருட்கள் பற்றி முடிவு செய்ய மன்ற சாதாரணக் கூட்டம் நடைபெற்றது.

1. **பொருள் :–** இந்நகராட்சி ஆணையாளர் திரு.ர. அசோக்குமார் அவர்களின் மே 2020 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** :-
மன்றம் பதிவு செய்யலாம்.
(ந.கஎண். 468/2020/சி1)
**தீர்மான எண்:** 873
**தீர்மானம்** : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

2. **பொருள் :–** இந்நகராட்சி பொறியியல் பிரிவில் பயன்பாட்டில் உள்ள TN60H 4800 ஜெட்ராடிங் வாகனத்தின் அடைப்பு எடுக்கும் Jetting Hose மாற்றம் செய்யப்பட்டு இரண்டு வருடங்களுக்கு மேல் பயன்படுத்தப்பட்டு வந்தது. தற்போது மேற்படி வாகனத்தின் மூலம் கொரானா தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்வதற்காக நகர் பகுதி முழுவதும் பிளிச்சிங் பவுடர் கலந்து தெளிக்கப்பட்டதால் வாகனத்தின் Jetting Hose முழுவதும் சேதமடைந்து பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. எனவே நகர்பகுதியில் புதைவடிகால் அடைப்பு எடுக்கும் பணியின் அவசியம் கருதி புதிய Jetting Hose வாங்கி மாற்றம் செய்திட 01.06.2020ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீட்டு தொகை ரூ.லட்சத்தில் | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரரின் விபரம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்தவரின் விபரம் |
|---|---|---|---|---|
| 1. | பெரியகுளம் நகராட்சிக்கு சொந்தமான TN60H4800 ஜெட்ராடிங் வாகனத்திற்கு Jetting Hose மற்றும் Nazzle விநியோகம் செய்தல் | ரூ.2.30 லட்சம் | Whale Enterprise Private Limited, 1/1d, Vilandurichi road, near senthottam, Kalapatti, Coimbatore<br>மதிப்பீட்டு விலையை விட 0.02% குறைவு | Whale Enterprise Private Limited, 1/1d, Vilandurichi road, near senthottam, Kalapatti, Coimbatore<br>மதிப்பீட்டு விலையை விட 0.02% குறைவு |
| 2. | | | Bharath Industries, coimbatore,<br>மதிப்பீட்டு விலையை விட 3.19% அதிகம் | |

மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த Whale Enterprise Private Limited, Coimbatore நிறுவனத்தின் மூலம் பணி மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u> :-

1. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்கண்ட வாகனத்திற்கு புதிய Jetting Hose மற்றும் Nazzle விநியோகம் செய்யும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த Whale Enterprise Private Limited, Coimbatore நிறுவனத்திற்கு பணி மேற்கொள்ள வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்கண்ட செலவினத் தொகையினை இந்நகராட்சி புதைவடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.கஎண். 586/2020/இ1)

**தீர்மான எண்: 874**

**தீர்மானம்** : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

3. **<u>பொருள்</u> :–** பெரியகுளம் நகராட்சி அலுவலகத்தில் பயன்படுத்தப்பட்டு வரும் அனைத்து கணினிகள் மற்றும் வசூல் மைய கணினிகள் அனைத்தும் இந்நகராட்சியில் உள்ள 5.00 KVA UPS இயந்திரம் மூலம் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேற்படி UPS இயந்திரத்தின் 12 எண்ணம் மின்கலன்கள் (Battery) அனைத்தும் பழுது ஏற்பட்டு பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளதால் அலுவலகத்தில் UPS இயந்திரத்தின் மூலம் கணினிகள் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. மேலும் மேற்படி இயந்திரம் மற்றும் மின்கலன்கள் வாங்கப்பட்டு ஆறு வருடங்களுக்கு மேலாகி விட்டதால் 5.00 KVA UPS இயந்திரத்திற்கான 12 எண்ணம் பழைய மின்கலன்களை (Battery) Buy Back முறையில் எடுத்துக் கொண்டு புதிய மின்கலன்கள் (Battery) விநியோகம் செய்யும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

<table>
<tr><th>வ. எண்</th><th>பணியின் விபரம்</th><th>ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரரின் விவரம்</th><th colspan="2">ஒப்பந்தப்புள்ளி தொகை விவரம்</th></tr>
<tr><td rowspan="2">1.</td><td rowspan="4">பெரியகுளம் நகராட்சி அலுவலகத்தில் உள்ள 5.00 KVA UPS இயந்திரத்திற்கான 12 எண்ணம் பழைய மின்கலன்களை (Battery) Buy Back முறையில் எடுத்துக் கொண்டு புதிய மின்கலன்கள் (Battery) விநியோகம் செய்யும் பணிகள் செய்தல்</td><td rowspan="2">பெரியார் பேட்டரி சென்டர், கம்பம் ரோடு, பெரியகுளம்</td><td>i) புதிய மின்கலன்கள் விநியோகம் செய்தல்</td><td>ரூ.1,41,600/–</td></tr>
<tr><td>ii) பழைய மின்கலன்கள்</td><td>ரூ.16,200/–</td></tr>
<tr><td rowspan="2">2</td><td rowspan="2">பிரியா எலக்ட்ரானிக்ஸ், சுதந்திர வீதி பெரியகுளம்</td><td>i) புதிய மின்கலன்கள் விநியோகம் செய்தல்</td><td>ரூ.1,45,200/–</td></tr>
<tr><td>ii) பழைய மின்கலன்கள்</td><td>ரூ.15,000/–</td></tr>
</table>

மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த பெரியார் பேட்டரி சென்டர், பெரியகுளம் நிறுவனத்தின் மூலம் பணி மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-**

1. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்கண்ட UPS இயந்திரத்தின் 12 எண்ணம் பழைய மின்கலன்களை (Battery) Buy Back முறையில் எடுத்துக் கொண்டு புதிய மின்கலன்கள் (Battery) விநியோகம் செய்யும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த பெரியார் பேட்டரி சென்டர், பெரியகுளம் நிறுவனத்திற்கு பணி மேற்கொள்ள வேலை உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்கண்ட செலவினத் தொகையினை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.கஎண். 587/2020/இ1)
**தீர்மான எண்:** 875
**தீர்மானம்** : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

4. **பொருள் :–** பெரியகுளம் நகராட்சி அலுவலகத்திற்கு குடிநீர் பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கும் இந்நகராட்சி பொறியியல் பிரிவிற்கு தற்போது TN60 K8842 ஈப்பு வாகனம் ஒன்று மட்டும் உள்ளது. இந்நகராட்சியின் இதர பணிகளான வரிவசூல் பணிகள், வரி நிர்ணயம் செய்யும் பணிகள், கட்டிட அனுமதி மற்றும் பொது சுகாதார பணிகள் மேற்பார்வையிடவும் மேலும் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆய்வுக் கூட்டங்கள் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அலுவலகத்தில் மண்டல இயக்குநர் அவர்களால் நடத்தப்படும் ஆய்வுக்கூட்டங்களில் ஆணையாளர் அவர்கள் கலந்து கொள்வதற்கு மேற்படி பொறியியல் பிரிவு ஈப்பு வாகனத்தையே பயன்படுத்தி வருகின்றனர்.

மேலும் தற்போது இந்நகராட்சியில் நகர்நலஅலுவலர் கொரோனா தொற்று நோய் தடுப்பு ஆய்வு பணிகள், திடக்கழிவு மேலாண்மை தொடர்பான ஆய்வு பணிகள், பிளாஸ்டிக் ஒழிப்பு ஆய்வு பணிகள் மேற்கொள்ளவும் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர், தேனி, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களின் ஆய்வுக் கூட்டங்களில் கலந்து கொள்வதற்கு மேற்படி பொறியியல் பிரிவு வாகனத்தையே பயன்படுத்தி வருகிறார். மேற்படி இந்நகராட்சியில் உள்ள ஒரு ஈப்பு வாகனத்தை மட்டும் கொண்டு அனைத்து அலுவலக பணிகளும் மேற்கொள்ள சிரமமாக உள்ளதால் ஆணையாளர் அவர்களுக்கு தனியாக ஒரு புதிய ஈப்பு வாகனம் GeM விலை விகிதத்தில் வாங்கிடவும், புதிய வாகனத்தில் கூடுதல் உபகரணங்கள் வாங்கி பொருத்திட அனுமதிக்கும், அதற்கான பிரேரணைகளை நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களுக்கு சமர்ப்பித்து அனுமதி பெற்றிடவும் மற்றும் புதிய வாகனத்திற்கான உத்தேச செலவினத் தொகை ரூ.8.50 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-**

1. இந்நகராட்சிக்கு GeM விலை விகிதத்தில் புதிதாக ஒரு ஈப்பு வாகனம் வாங்கிடவும் மற்றும் புதிய வாகனத்தில் கூடுதல் உபகரணங்கள் வாங்கி பொருத்திட அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களுக்கு கடிதம் அனுப்ப மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்கண்ட செலவினத் தொகையினை இந்நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 686/2020/இ1)

**தீர்மான எண்:** 876
**தீர்மானம்** : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

5. பொருள் :– பெரியகுளம் நகராட்சி தலைமை குடிநீர் நிலையம் மற்றும் நான்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளின் மூலம் குடிநீர் நீரேற்றம் செய்யப்பட்டு நகர்ப் பகுதிக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளில் உள்ள 15 ஹெச்.பி. மோட்டர், 12.5 ஹெச்.பி. சர்மெர்சிபல் பம்ப், வால்வுகள் மற்றும் ஸ்டார்ட்டர்களில் உள்ள பழுதுகளை சரி செய்யும் பணிகள் மேற்கொள்வதற்கும், வடக்கு பாரஸ்ட் ரோடு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியின் மேலேற்றும் பம்ப்பிங் மெயின் 10 AC லைன் உடைப்பை சரி செய்திடவும் மற்றும் வார்டு எண்.7 வடகரை பள்ளிவாசல் தெருவிற்கு புதிய பேருந்து நிலைய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து கூடுதலாக இணைப்பு வழங்கும் பணிகள் மேற்கொள்வதற்கும் இந்நகர்மன்றத் தீர்மான எண்.858 நாள்.27.03.2020ல் அனுமதி பெறப்பட்டது. அதன்படி மேற்படி பணிக்கு 01.06.2020ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீட்டு தொகை ரூ.இலட்சத்தில் | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரரின் விபரம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்தவரின் விபரம் |
|---|---|---|---|---|
| 1. | பெரியகுளம் நகராட்சி தலைமை குடிநீர் நிலையம் மற்றும் நான்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் உள்ள வால்வுகள் மற்றும் மோட்டார்கள் பழுது நீக்கும் பணிகள் செய்தல், வார்டு எண்.7 வடகரை பள்ளிவாசல் தெருவில் புதிய பேருந்து நிலைய நீர்த்தேக்கத் தொட்டியின் மூலம் கூடுதல் இணைப்பு வழங்கும் பணிகள் செய்தல் | ரூ.0.78 லட்சம் | N. பொன்மணி, ஆகாஷ் கன்சல்டன்சி, ஒப்பந்ததாரர், தேனி மதிப்பீட்டு விலையை விட 0.17% குறைவு | N. பொன்மணி, ஆகாஷ் கன்சல்டன்சி, ஒப்பந்ததாரர், தேனி மதிப்பீட்டு விலையை விட 0.17% குறைவு |
| 2. | | | நாகராஜ் இன்ஜினியரிங் லேல் & வெல்டிங் ஒர்க்ஸ் , மதிப்பீட்டு விலையை விட 1.28% அதிகம் | |

மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த N.பொன்மணி, ஆகாஷ் கன்சல்டன்சி, ஒப்பந்ததாரர், மூலம் பணி மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u> :-**

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த N.பொன்மணி, ஆகாஷ் கன்சல்டன்சி, ஒப்பந்ததாரர் மூலம் பணி மேற்கொள்வதற்கு வேலை உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 240/2020/இ1)
**தீர்மான எண்:** 877
**தீர்மானம்** : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

6. **<u>பொருள்</u> :–** பெரியகுளம் நகராட்சிக்கு சொந்தமான கழிவுநீர் உந்து நிலையத்தில் உள்ள 80 ஹெச்.பி. பம்ப் பழுது ஏற்பட்டுள்ளதால் பயன்படுத்த முடியாமல் உள்ளது. எனவே மேற்படி பம்ப்கள் மற்றும் மோட்டார்களில் தேவையான அனைத்து பழுதுநீக்கும் பணிகள் செய்திடவும், மேலும் உந்து நிலையத்தில் உள்ள வடிகட்டி கிணறு, சேறுகள் சேகரம் செய்யும் கிணறு, மற்றும் கழிவுநீர் சேகரம் செய்யும் கிணறு ஆகிய மூன்று கிணறுகளையும் சுத்தம் செய்யும் பணிகள் மேற்கொள்வதற்கு இந்நகர்மன்றத் தீர்மான எண்.859 நாள்.27.03.2020ல் அனுமதி பெறப்பட்டது. அதன்படி மேற்படி பணிக்கு 01.06.2020ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீட்டு தொகை ரூ.இலட்சத்தில் | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரரின் விபரம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்தவரின் விபரம் |
|---|---|---|---|---|
| 1. | பெரியகுளம் நகராட்சி கழிவுநீர் உந்து நிலையத்தில் உள்ள மோட்டார்கள் மற்றும் பம்ப்களில் தேவையான பழுது நீக்கப்பணிகள் செய்தல், உந்து நிலையத்தில் உள்ள கிணறுகளை சுத்தப்படுத்தும் பணிகள் செய்தல் | ரூ.3.25 லட்சம் | N. பொன்மணி, ஆகாஷ் கன்சல்டன்சி, ஒப்பந்ததாரர், தேனி மதிப்பீட்டு விலையை விட 0.14% குறைவு | N. பொன்மணி, ஆகாஷ் கன்சல்டன்சி, ஒப்பந்ததாரர், தேனி மதிப்பீட்டு விலையை விட 0.14% குறைவு |
| 2. | | | நாகராஜ் இன்ஜினியரிங் லேல் & வெல்டிங் ஒர்க்ஸ் , மதிப்பீட்டு விலையை விட 1.02% அதிகம் | |

மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த N.பொன்மணி, ஆகாஷ் கன்சல்டன்சி, ஒப்பந்ததாரர், மூலம் பணி மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u> :-**

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த N.பொன்மணி, ஆகாஷ் கன்சல்டன்சி, ஒப்பந்ததாரர் மூலம் பணி மேற்கொள்வதற்கு வேலை உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 281/2020/இ1)
**தீர்மான எண்:** 878

**தீர்மானம்** : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

7. **பொருள் :–** அரசாணை (நிலை) எண்.18 (நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை) நாள்.04.02.2019ன்படி நகராட்சி பகுதியில் கட்டப்படும் கட்டிடங்களுக்கு முன்வைப்புத் தொகையாக ரூ.10,000/– வசூல் செய்ய தெரிவிக்கப்பட்டதன் பேரில் இந்நகராட்சி பகுதியில் கட்டப்படும் கட்டிடங்களுக்கு ரூ.10,000/– முன்வைப்புத்தொகையாக வசூல் செய்யப்பட்டு வருகிறது. இந்நிலையில் அரசாணை (நிலை) எண்.16 (நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை) நாள். 31.01.2020ன்படி நகராட்சி பகுதியில் கட்டப்படும் கட்டிடங்களுக்கு தற்சமயம் வசூல் செய்யப்பட்டுவரும் முன்வைப்புத்தொகை ரூ.10,000/–க்கு பதிலாக ரூ.1500/– மட்டும் வசூல் செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே அரசாணை (நிலை) எண்.16 (நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை) நாள். 31.01.2020ன்படி நகராட்சி பகுதியில் கட்டப்படும் கட்டிடங்களுக்கு இனிவரும் காலங்களில் ரூ.1500/– மட்டும் வசூல் செய்ய மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : -**

1. அரசாணையை மன்றம் பார்வையிட்டு பதிவுசெய்யலாம்.
2. அரசாணையில் குறிப்பிட்டுள்ளவாறு இந்நகராட்சி பகுதியில் கட்டப்படும் கட்டிடங்களுக்கு இனிவரும் காலங்களில் முன்வைப்புத் தொகையாக தற்போது வசூல் செய்து வரும் ரூ.10,000/–க்கு பதிலாக ரூ.1500/– மட்டும் வசூல் செய்ய மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.1954/2014/எப்1)

**தீர்மான எண்: 879**

**தீர்மானம்** : அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

8. **பொருள் :–** பெரியகுளம் நகராட்சி அலுவலகத்தில் அனைத்து பிரிவுகளில் உள்ள கணினிகள் மற்றும் பிரிண்டர்கள் பயன்பாட்டிற்கு 2020–2021ம் ஆண்டிற்கு தேவையான கீழ்க்காணும் கணினி எழுதுபொருட்கள் வாங்கிட அனுமதிக்கும், அதற்கான உத்தேச செலவினத் தொகை ரூ.3,00,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | பொருட்கள் விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | Toner Catridge (HP Laserjet Pro MFP M226dn – CC388A) | 20.00 No’s |
| 2. | Toner Catridge (HP Laserjet Pro M401dn – CF280A) | 10.00 No’s |
| 3. | HP Laser Jet 1005 | 10.00 No’s |
| 4. | Toner Catridge (HP Laserjet Pro M202dw – 88A) | 5.00 No’s |
| 5. | Supply of Compact disc with cover | 100.00 No’s |
| 6. | Pen Drive (16 GB) | 5.00 No’s |

| | | |
|---|---|---|
| 7. | Supply Anti Virus software | 15.00 No's |

<u>அலுவலகக்குறிப்பு</u> :-

மேற்கண்ட செலவினத் தொகையினை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 652/2020/இ1)

**தீர்மான எண்: 880**

**தீர்மானம் :** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

(ஒம்) ர. அசோக்குமார்
தனி அலுவலர்

/உண்மை நகல்/

ஆணையாளர்
பெரியகுளம் நகராட்சி